**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# *சபையும் அதன் ஒழுங்குமுறையும் – பகுதி 06*

***மத்தேயு 18:15-20***, [15] *“உன் சகோதரன் உனக்கு விரோதமாகக்*
*குற்றஞ்செய்தால், அவனிடத்தில் நீ போய், நீயும் அவனும்*
*தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து;*
*அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை*
*ஆதாயப்படுத்திக்கொண்டாய்.* [16]*அவன்*
*செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய*
*வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி,*
*இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ.*
[17]*அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச்*
*சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும்*
*செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு*
*அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும்*
*இருப்பானாக.* [18]*பூலோகத்திலே நீங்கள் எவைகளைக்*
*கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும்*
*கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக்*
*கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும்*
*கட்டவிழ்க்கப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச்*
*சொல்லுகிறேன்.* [19]*அல்லாமலும், உங்களில் இரண்டுபேர்*
*தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக்*
*காரியத்தைக்குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால்,*
*பரலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு*

*உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். [20]ஏனெனில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். "*

*இங்கு பூமியில் உள்ளவரை தன்னுடைய பிள்ளைகளின் வாழ்வு தூய்மையாக இருக்க வேண்டும் என்பதே தேவனின் ஆசை. 1 பேதுரு 1:16, "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்." (புதிய உடன்படிக்கை சபைக்கு பழைய உடன்படிக்கையான லேவியராகமம் 11:44இலிருந்து மேற்கோளாக காட்டப்பட்டுள்ளது).*

*தேவனாகிய இயேசு சபைக்கு என்ன கற்றுக்கொடுக்கிறார் என்பதை நீங்கள் உங்கள் மனதில் தெளிவாக அறிந்திருக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன்.*

- ***செயல்முறை 1**: அவரை நேர்முகமாக போய் சந்தித்து கிறிஸ்துவுக்கு என்று அவரை / அவளை வென்றெடுக்க முயற்சி செய்யுங்கள்.*
- ***செயல்முறை 2:** அவரது/அவளது குற்றத்தை மெய்பிபதற்கு/ நம்பச்செய்வதற்கு இரண்டு அல்லது மூன்று சாட்சிகளை எடுத்துச் செல்லுங்கள். இதனால் அந்த நபரை திருத்தி வெற்றிபெற முடியும்.*
- ***செயல்முறை 3:** சபைக்குச் சொல்லுங்கள், அவர் அதற்கு செவிகொடுத்தால் அவரை/அவளை ஏற்றுக்கொள்ளுங்கள்.*
- ***செயல்முறை 4:** அந்த நபர் அந்த திருத்தத்தை ஏற்க மறுத்து தன்னை மாற்றிக்கொள்ள மறுத்தால் பிறகு அவரை அந்த சபையை விட்டு வெளியேற்றவும்.*

- ***செயல்முறை 5:*** *ஐக்கியதிலிருந்து அந்த பாவியை தவிர்க்க வேண்டும். அவன் மனம் திரும்பினால் அவனை சகோதரனாக ஏற்றுக்கொள்ளுங்கள், இல்லையெனில் அவனை அஞ்ஞானியைப்போல போல நடத்துங்கள்.*

*சபை ஏன் இதை செய்ய வேண்டும் என்பதை பற்றி இன்று நாம் காண்போம்?*

*சபை/நமது அதிகாரம் தான் என்ன?*

*சபை/நாம் எந்த வல்லமையை கொண்டு இதை செய்யலாம்?*

*நாம் எந்த உரிமையை கொண்டு இதை செய்யலாம்?*

*வ 18-20, பாவங்களை எதிர்கொள்ளாமலும், பரிசுத்தத்தை பற்றி அறிவிக்காமலும், மற்றும் தேவ பயமில்லாமலும் சபையை புதுப்பித்து அதற்கு ஒரு புத்துயிர் கொடுக்கும் திசையை நோக்கி நம்மால் வழிநடத்த முடியாது. எனவே நம்முடைய அனைத்து முயற்சிகளும் இதைக்குறித்ததாக இருக்க வேண்டும்.*

*“[18]பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ” என்று வ18 கூறுகிறது.*

*நீங்கள் பூமியில் இருக்கும் போது மற்றவரிடம் “நீங்கள் இன்னும் உங்கள் பாவக்கட்டுகளுக்குள் உள்ளீர்கள்” என்று கூறுவதை குறிப்பிடுகிறது. இதை நீங்கள் பூமியில் கூறும்போது, அது ஏற்கனவே பரலோகத்தில் கட்டப்பட்டிருக்கும்.*

*நீங்கள் பூமியில் இருக்கும் போது மற்றவரிடம், ''உங்களுடைய பாவங்களிலிருந்து விடுதலை பெறுவீர்களாக -'' என்று கூறும்பொது நீங்கள் அவரை அவருடைய பாவங்களிலிருந்து விடுவிக்கின்றீர்கள். பரலோகமும் அதை ஏற்கனவே செய்திருக்கும்.*

*உங்களுடைய பாவங்கள் உங்கள் மீது கட்டப்பட்டிருக்கும் (பிணைக்கப்பட்டிருக்கும்) அல்லது உங்களுடைய பாவங்கள் விடுவிக்கப்பட்டிருக்கும், என்று தேவன் அளித்த அதிகாரத்தைக் கொண்டு சபை கூறும் பட்சத்தில் அது பரலோக பிதாவின் சித்தத்தில் நடக்கிறது. பரலோக பிதா ஏற்கனவே கூறியதால் ஒருவன் சபையின் திருத்துதலால் குற்றத்தை ஒத்துக்கொண்டு கீழ்ப்படிந்தால் அவன் பாவங்கள் விடுவிக்கப்பட்டிருக்கும் இல்லாவிடில் விடுவிக்கப்படாது.*

*சபையானது தேவனின் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையின் படி ஒழுங்குமுறையைத் பின்பற்றுகையில் பூமியில் செய்யப்படும் காரியங்களை பரலோகம் உறுதிப்படுத்துகிறது.*

*சபை தேவனின் சித்தத்திற்கு இணங்க நடக்கும் போது பரோகத்தில் இருக்கும் தேவன் சபையோடு நடக்கிறார்.*

*வேறு வழியில், இப்போது ஒரு நபர் மனந்திரும்பி அவரது இதயத்தில் வருத்தப்படுகிறார் என்றால் சபையில் இருக்கும் நாம் ''உங்களுடைய பாவங்கள் விடுவிக்கப்படுவதாக'' என்று கூறி ஐக்கியத்தில் இணைய அழைப்பு விடுத்தால் ஏற்கனவே நம் தேவனும் பரோலத்தில் இருக்கும் பிதாவும் செய்து முடித்ததையும் அவர்களின் சித்தத்தையும் பின்பற்றுவதாக இருக்கம்.*

*நம்முடைய அதிகாரம் என்ன?*

## *1. பரலோகத்தில் இருக்கும் பிதாவாகிய கர்த்தர் நம்முடன் வேலை செய்கிறார்!*

*வ19 கூறுவதாவது நீங்கள் ஒருமனப்பட்டு எதையாவது தொட்டு கேட்கும் எதுவாகிலும் பரலோகத்தில் இருக்கும் நம் பிதா அதை நமக்காக செய்து முடிப்பார்.*

*இந்த வசனம் எந்த காரியங்களை பற்றி இங்கே கூறுகிறது?*

*பாவிகளின் ஒழுக்கம்.*

*சரி, ஏன் இங்கே இரண்டு பேர் தேவைபடுகிறார்கள்?*

*ஒரு நபர் பாவத்தில் ஈடுபட்டிருப்பதை உறுதிப்படுத்த குறைந்த பட்ச எண்ணிக்கை இது தான்.*

*நியாபகம் உள்ளதா இரண்டு அல்லது மூன்று சாட்சிகள்??*

*முதலில் அந்த நபரை தனியே சந்தித்த பின்னர் இரண்டு மூன்று சாட்சிகளுடன் சந்திக்க வேண்டும். பிறகு அந்த காரியத்தில் தேவனுடைய சித்தத்தை தான் தேடுவதாக அவருக்கு உறுதிபடுத்தவேண்டும். அது அவர்களுக்கு பரலோகத்தில் இருக்கும் பிதாவால் முடிவுபெறும்.*

*இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பேர் என்பது இரண்டு சாட்சிகள். இவர்கள் தான் ஒருவரின் மனந்திரும்பாத இதயத்தை அல்லது மனந்திரும்பிய இதயத்தை உறுதிப்படுத்துவார்கள்.*

*அவர் குறைந்த எண்ணிக்கையிலிருந்து தொடங்குகிறார். நீங்கள் இருவரும் நிஜமான உண்மை இது தான் என்று*

*சம்மதித்து உறுதி செய்தால், பிறகு தேவன் பரலோகத்தில் அதற்கு ஏற்றாற்போல் செய்கிறார்.*

*அவருடைய மகிமையான ராஜ்யத்தை விரிவுபடுத்துவதற்கான மிகப்பெரிய அளவிலான அதிகாரம் கொண்ட கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள் நாம்.*

*நான் "ஒருமனப்பட்டு" அதாவது "சம்பினோ" (sumphōneō) என்ற வார்த்தையை வலியுறுத்த விரும்புகிறேன். இந்த வார்த்தையில் இருந்து தான் "சிம்பொனி" (symphony) என்ற வார்த்தை வந்தது. இதற்கு "ஒன்றாக ஒலியை உருவாக்குவது" என்பது பொருள்.*

*இந்த நபரின் வாழ்க்கையைப் பார்க்கிற நீங்கள் எல்லாரும் அவருடைய பாவம் இன்னும் இருக்கிறதென்று ஒப்புக்கொண்டாலோ அல்லது அவர் தன்னுடைய பாவத்தில் இருந்து மனந்திரும்பிவிட்டார் என்றாலோ அல்லது எதுவாக இருந்தாலும் நீங்கள் அதை ஒத்துக்கொண்டால், தேவனும் உங்களுடன் ஒரு உடன்படிக்கைக்கு வருவார்.*

*இந்த வசனம் ஜெபத்தை ஒரு வெற்று காசோலையாக கூறுகிறது என்று நான் நினைக்கவில்லை மேலும் இது இன்றைய சபைகளில் முழுவதுமாக தவறாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.*

*பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அதை அதன் சூழலில் இருந்து பிரித்தெடுத்து உபயோகப்படுத்துகிறார்கள். மேலும் பலர் தவறாக பயன்படுத்துவது போல இவர்கள் இரண்டு பேரும் ஏதோவொரு இரண்டு பேர் அல்ல. இரண்டு பேர் இணங்கி எதைக்கேட்டாலும் அதை தேவன் தந்துதான் ஆக வேண்டும் என்று இந்த வசனத்தை தவறாக பயன்படுத்துகின்றனர்.*

*இரண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் சபையில் பாவம் செய்யும் சகோதரரை திருத்தும் சாட்சிகளே! இந்த இரண்டு!! தேவனின் சித்தம், பாவஞ்செய்கிற சகோதரர் மீது நிறைவேற வேண்டும் என்றும் மேலும் உண்மையில் அவருடைய வாழ்க்கையில் சரியானதை விரும்புகிறவர்களே அந்த இரண்டு சாட்சிகள்.*

*அவர்கள் இந்த விவகாரத்தை ஏற்றுக்கொண்டு வேதவாக்கியத்தில் வெளிப்படுத்தப்பட்ட விவிலிய வகைகளை (pattern) பின்பற்றினால், அவர்கள் தேவனுடைய சித்தத்தைத் தேடுகிறார்கள் என்று நம்பிக்கையுடன் இருக்கலாம். பின்னர் அவர்கள் தேவனின் விருப்பத்தை பெறுவார்கள் மேலும் தேவனே அவர்களது வாழ்க்கையில் அவற்றை நிறைவேற்றுவார்.*

*உங்கள் திறமையை சந்தேகிக்கவோ அல்லது கேள்வி கேட்கவோ தேவையில்லை ஆனால் தேவனுடைய வார்த்தையின்படியே நீங்கள் ஒவ்வொரு அடியையும் எடுத்து, சாட்சிகளோடு இணங்கினால், நீங்கள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறீர்கள் என்று நீங்கள் நிச்சயமாய் இருக்கலாம். அது சபையை பரிசுத்தத்தின் பாதையில் வழிநடத்தும்.*

## *2. தேவனுடைய குமாரனாகிய இயேசு பூமியிலே நம்மோடு வேலைசெய்கிறார்!*

*அதிகாரத்தின் ஒரு பக்கத்தில் பரலோகத்தில் உள்ள தேவன் நம்முடன் இருந்து செயல்படுவார் அதன் மற்றொரு பக்கத்தில் பூமியில் உள்ள அவருடைய குமாரனாகிய இயேசு நம்முடன் இருந்து செயல்படுவார்.*

*இது தான் இரட்டை தெய்வீக அதிகாரம் .*

*வ 20, பூமியிலுள்ள குமாரன்  நம்மோடு வேலை செய்வார்.*

*இன்றைய சபைகளில் இந்த அதிகாரமும் வசனமும் தான் மிகவும் தவறாக பயன்படுத்தப்படுகின்றன .*

*"**இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்**."*

*இந்த ஜெபத்தை நீங்கள் எந்த ஜெப கூட்டங்களுக்கு சென்றிருந்தாலும்  கேள்விப்பட்டிருக்கக் கூடும்.... ஒருவேளை நீங்களே கூட பலமுறை இந்த ஜெபத்தை செய்திருக்கலாம்.*

*நீங்கள் தனியாக ஜெபம் செய்தால் என்ன ஆகும் என்று எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?*

*நீங்கள் தனியாக ஜெபம் செய்தால் தேவன் உங்களோடு இருப்பாரா?*

*என் அன்பான சகோதர சகோதரிகளே இந்த வசனத்தை அதன் சூழலில் இருந்து பார்க்கும்படி தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன்.*

*என்ன இந்த இரண்டு அல்லது மூன்று ?*

*சபையில் பாவஞ்செய்திருக்கும் சகோதரனைப் பற்றி குற்றஞ்சாட்டுபவர்களே இந்த இரண்டு சாட்சிகள்.*

*இயேசுகிறிஸ்து, என் வேலைகளை செய்ய என் பெயரால் இரண்டு அல்லது மூன்று சாட்சிகளுடன் கூடும்போது நான் அங்கு இருப்பேன் என்று கூறுகிறார்.*

*கிறிஸ்துவின் வேலை என்ன?*

*பாவஞ்செய்யும் சகோதரரை திருத்துவது.*

*அதனால், தேவாலயத்தில் பாவஞ்செய்த சகோதரர் ஒருவரை நீங்கள் திருத்தும்போது, நான் சபையில் உங்கள் மத்தியில் உலாவுகிறேன். அதனால், முடிவாக "என் குணத்தையும் என் சித்தத்தையும் பிரதிபலிக்க நீங்கள் என் பெயரில் கூடிவந்தால், அங்கு மத்தியில் நான் இருக்கிறேன்" என்று இயேசு கூறுகிறார்.*

*அதனால்தான், வேதவசனங்களை அதன் பின்னணியில் இருந்து தான் வாசிக்க வேண்டும் என்று நான் எப்போதும் வலியுறுத்துகிறேன்.*

*மீண்டுமாக இந்த அதிகாரத்தின் ஓட்டத்தை நான் உங்களுக்காக தருகிறேன்.*

- *வ 1-4, நீங்கள் பிள்ளைகளாய் கடவுளுடைய ராஜ்யத்தில் நுழைய முடியும்*
- *வ 5-9, நீங்கள் கடவுளுடைய ராஜ்யத்தில் பிள்ளைகளைப் போலவே பாதுகாக்கப்படுவீர்கள்*
- *வ 10-14, நீங்கள் கடவுளுடைய ராஜ்யத்தில் ஒரு பிள்ளையைப் போலவே கவனிக்கப்படுவீர்கள்*
- *வ 15-20, தேவனுடைய ராஜ்யத்தில் ஒரு பிள்ளையைப்போல நீங்கள் சிட்சிக்கப்படுவீர்கள்*
- *வ 21-35, தேவனுடைய ராஜ்யத்தில் ஒரு பிள்ளையைப்போல நீங்கள் மன்னிக்கப்படுவீர்கள்*

*மேலே கூறப்பட்ட பத்தியில் இருந்து சபையில் திருத்துவது பற்றி நாம் தெளிவாக அறிந்து கொண்டோம்.*

*பிதாவானவர் பரலோகத்தில் இருந்தும் அவருடைய குமாரன் பூமியில் இருந்து நம்முடன் செயல்படுகின்றனர். நாம் ஒரு பாவத்திலுள்ள சகோதரரை திருத்தும்போது, நாம் தேவசித்தத்தை நிறைவேற்றுகிறோம் மேலும் அவரது சொந்த சபையை தூய்மைப்படுத்தி மற்றும் சுத்திகரிக்கப்படுவதன் மூலம் குமாரனின் வேலையின் ஒரு பகுதியையும் செய்கிறோம். நாம் அனைவவரும் பரிசுத்தத்திற்கான ஊழியக்காரர்களாக இருக்க வேண்டும்.*

## *இதில் பாதிக்கப்படவருக்கு என்ன?*

*அந்த சகோதரரையோ அல்லது சகோதரரியையோ மீட்டுகொண்டுவர வேண்டும். அவர்களை திரும்ப கொண்டு வந்தேயாக வேண்டும்.*

*தேத்றிச் போண்ஹோபர் (Dietrich Bonhoeffer), என்ற ஜெர்மானிய தத்துவ அறிஞர் தன்னுடைய இணைந்த வாழ்க்கை (Life Together) என்ற புத்தகத்தில்,*

*பாவம் ஒரு மனிதனை தனிமைபடுத்துகிறது. இது அவனை சமூகத்திலிருந்து விலக்கி வைக்கிறது. ஒரு மனிதன் மிகவும் தனிமைப்படுத்தப்பட்டால், பாவத்தின் வல்லமை அவன் மீது மிகவும் அதிகமாக இருக்கும். மேலும் மிகவும் ஆழமாக அவன் அதில் ஈடுபடுவான், அதனால் அவரது தனிமை மிகவும் ஆபத்தானது. இது ஒளியை ஒழித்துவிடும். "Sin demands to have a man by himself. It withdraws him from the community. The more isolated a person is, the more destructive will be the power of sin over him. And the more deeply he becomes involved in it, the more disastrous is his isolation. Sin wants to remain unknown. It shuns the light.*

*“ஒப்புதல் வாக்குமூலத்தில், சுவிசேஷத்தின் வெளிச்சமானது இருட்டயும் மற்றும் இதயத்தயும் தனித்தனியாக உடைக்கிறது. அந்த பாவமும் வெளிச்சத்திற்கு வருகிறது. வெளிப்படுத்தாதவையை வெளிப்படையாக பேசி ஒப்புக்கொள்ளப்பட்டது. இரகசியமும் மேலும் மறைக்கப்பட்ட அனைத்தும் வெளிகொண்டுவரப்பட்டது. “In confession, the light of the gospel breaks into the darkness and seclusion of the heart. The sin is brought into the light. The unexpressed is openly spoken and acknowledged. All that is secret and hidden is made manifest.*

*“கிறிஸ்தவ சகோதரரின் முன்னிலையில் பாவத்தை அறிக்கையிடுவதால், சுய நியாயப்படுத்தலின் கடைசி அரண் கைவிடப்பட்டது. பாவி சரணடைகிறார். அவர் தன்னுடைய அனைத்து தீய குணங்களையும் விட்டொழிக்கிறார். அவர் தன்னுடைய இருதயத்தை தேவனுக்ககாக தருகிறார். அவருடைய அனைத்து பாவங்களுக்காக மனிப்பும் மேலும் அவர் இயேசு கிறிஸ்துவும் அவருடைய சகோதரரின் ஐக்கியத்தையும் பெறுகிறார். வெளிப்படையாக கூறிய அந்த பாவத்திற்கு சக்தி இல்லாமல் போகும். அது பாவம் என வெளிப்படுத்தப்பட்டும் நியாம் தீர்க்கப்பட்டுமாகிவிட்டது. அதுவால் இனிமேலும் ஐய்க்கியத்தில் பிளவு ஏற்படுத்த முடியாது. “Since the confession of sin is made the presence of a Christian brother, the last stronghold of self-justification is abandoned. The sinner surrenders. He gives up all his evil. He gives his heart to God. He finds the forgiveness of all his sin and the fellowship of Jesus Christ and his brother. The expressed acknowledged sin has lost all its power. It has been revealed and judged as sin. It can no longer tear the fellowship asunder.*

*இப்போது ஐய்க்கியமானது சகோதரரின் பாவத்தை தாங்குகிறது. இனிமேலும் அவர் தன் பாவத்தோடு தனியாக*

*இல்லை. ஏனென்றால் அவர் தன் பாவங்களை அறிக்கையிட்டு கடவுளிடம் அதை ஒப்புக்கொடுத்துவிட்டார். அது அவரிடமிருந்து நீக்கப்பட்டுவிட்டது. இப்போது அவர் கடவுளின் கிருபையினாலும், இயேசு கிறிஸ்துவின் சிலுவையினாலும் வாழ்கிற பாவிகளின் ஐக்கியத்தில் நிற்கிறார். மறைத்து வைக்கப்பட்ட பாவம் அவரை ஐக்கியத்தில் இருந்து பிரித்து அவருடைய ஐக்கியம் அனைத்துமே போலியானது. ஒப்புக்கொண்ட பாவம் இயேசு கிறிஸ்துவில் உள்ள சகோதரர்களுடனான உண்மையான ஐக்கியத்தை ஏற்படுத்திக்கொள்ள உதவுகிறது.*" *"Now the fellowship bears the sin of the brother. He is no longer alone with his evil for he has cast off his sin in confession and it handed it over to God. It has been taken away from him. Now he stands in the fellowship of sinners who live by the grace of God and the cross of Jesus Christ. The sin concealed separated him from the fellowship, made all his apparent fellowship a sham. The sin confessed has helped him to find true fellowship with the brethren in Jesus Christ."*

*பாவஞ்செய்து கொண்டிருக்கும் சகோதரனை மீட்டுக்கொள்ளும் ஊழியம்.*

*அதுதான்*

- *சபையின் பரிசுத்தத்திற்கும்*
- *சபையை புதுபிப்பதற்கும் ,*
- *சபைக்கு புத்துயிர் அளிப்பதற்கும்*

*புதுப்பிக்கப்பட்ட சபையின் மூலம் உலகத்தை அடைவதற்குமான திறவுகோள்*